**பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III - 2020**

---

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச்செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டுமென நான்கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் தகவல்களின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும்உள்ளன. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரணை வீதிக்கு 860 மீற்றர்கள் நீளமானபுதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதி போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். இவ் வீதி இரண்டு பக்கங்களிளும் எழுப்பிய நடைபாதையுடனான 03 லேன் இரட்டை வழிப்பாதையுடன் நிர்மனிக்கப்படும். இச்செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் காணி கொள்வனவிற்கான தற்காலிக மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 4,860 மில்லியனாக உள்ளதுடன் நிர்மனத்திற்கான கிரயம் 5,250 மில்லியனகும். இருப்பினும்இ செயற்திட்டத்தின் சிவில் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் நிர்மானத்திற்கு தேவையான நிதி 2021 ஜுன் 30 இல் உள்ளவாறு கூட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற் திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பேஸ் லைன் வீதி செயற்திட்டம் கட்டம் III ஆனது ரத்மலானவில் கிருலப்பனை தொடக்கம் மெலிபன் சந்தி வரையான வீதியின் 7.42 கி.மீ நீளத்தினை நிர்மானிக்க 2004 ஓகஸ்ட் 12 இல் வழங்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதியின் பிரகாரம் 2004 இல் முதல் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது.<br>இருப்பினும், இவ்வீதியின் நீளம் செயற்திட்டத்தின் கிரயத்தினை கருத்தில் கொண்டு 0.86 கி.மீ ஆக குறைக்கப்பட்டிருந்ததுடன் 2009 நவம்பர் 19 இலான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொழும்பு பகுதியில் வாகன நெரிசலினை குறைக்க இது முக்கியமானதொன்றாகும். | உடன்பட்டனர். 2009 நவம்பர் 19 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபை 0.86 கி.மீ வரை குறைப்பதற்கு செயற்திட்ட வேலைப்பரப்பினை மாற்றவேண்டியிருந்தது. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் செயற்திட்டத்தின் கிரயம் மற்றும் அதன் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு ஆரம்பத்தில் சரியாக அடயாளப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் வேலைப்பரப்பானது 2009 நவம்பர் 19 இலான அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 0.86 கி.மீ ஆக குறைக்கப்பட்டிருந்தும், செயற்திட்டத்தின் வீதி நிர்மான நடவடிக்கைகள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 மடிகளின் பின்னர் கூட ஆரம்பிக்க முடியாமலிருந்தது. மேலும் 2020 திசெம்பர் 31 வரை காணி கொள்வனவு கிரயம் மற்றும் பீஎம்யூ கிரயத்திற்காக மொத்தமாக ரூபா 1,988 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். ஆரம்பத்திலிருந்து இச் செயற்திட்டத்திற்கு எதிராக பல்வேறு பொது மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காணப்பட்டன. அதன் பெறுபேறாக, செயற்திட்ட நடவடிக்கைகளை கட்டுப்படுத்த ஆர்டிஏவிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு 2009 இல் மாற்றியமைக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் காரணமாக முறைப்பாட்டுதாரரால் மீளப்பெறப்பட்டிருந்தது. | காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் மற்றும் வீதி நிர்மான வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்ர்பட்ட விடயங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள |
| --- | --- | --- |
| மீளமைக்கப்பட்ட/நிருத்தப்பட்ட வேலைப்பரப்பின் அடிப்படையில் 202 காணித்துண்டுகள் கொள்வனவு செய்ய வேண்டியிருந்தும், 23 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுததும் 46 காணித்துண்டுகள் மாத்திரமே செயற்திட்டத்தினால கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,494 மில்லியன் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது மேலும், 66 காணித்துண்டுகளிற்கான இழப்பீட்டில் அண்ணளவாக 45 சதவீதமான ரூபா 386.44 மில்லியன் வட்டி உள்ளடங்களான ரூபா 849.35 மில்லியன் தொகையான இழப்பீடு நிதிகளின் பற்றாக்குறை காரணமாக 2021 ஜூன் 30 இல் உள்ளவாறு செலுத்த முடியாமல் போக கூடியமை அவதானிக்கப்பட்டது. | உடன்பட்டனர். | ஒட்டுமொத்த திட்டத்தினையும் கருத்தில்கொண்டு அடயக்கூடிய இலக்குகளை தொகுக்க வேண்டியதுடன் ஒதுக்கீடுகள் அதனடிப்படையில் செய்யப்படல் வேண்டும். |